இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 178 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 25 – ஞாயிற்றுக்கிழமை 08 பிப்ரவரி 2026 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 178 : Thiruvalluvar Year - 2057 - Thai 25 - Sunday 08 February 2026 - Madurai 12 Pages ₹ 5.00

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.2.2026) தலைமைச் செயலகத்தில், டெல்லி–இந்திய ஐவுளித் தொழில் கூட்டமைப்பு, மும்பை–பருத்தி ஐவுளி ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆணையம், மும்பை–செயற்கை மற்றும் தொழில்நுட்ப ஐவுளி ஏற்றுமதி மேம்பாட்டு கழகம், விசைத்தறி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம், தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம், தென்னிந்திய ஐவுளி ஆராய்ச்சிக் கழகம், இந்திய தொழில் கூட்டமைப்பு–தமிழ்நாடு ஐவுளிப் பிரிவு, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், கரூர் ஐவுளி உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், திண்டுக்கல் – தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கம், கோவை– தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், மறுசுழற்சி ஐவுளி கூட்டமைப்பு, இந்திய ஐவுளி கூட்டமைப்பு, ஓபன் எண்ட் நூற்பாலைகள் சங்கம், திருப்பூர் சாய ஆலை உரிமையாளர்கள் சங்கம், இராஜபாளையம் நூற்பாலைகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து, 29.1.2026 அன்று கோயம்புத்தூர் மாநகரின் கொடீசியா வளாகத்தில், நடைபெற்ற "முதலாவது சர்வதேச ஐவுளித் தொழில் மாநாடு 360–இல்" ஐவுளி நிறுவனங்களுக்கு, அதிநவீன நெசவு மற்றும் பின்னலாடை இயந்திரங்களை கொள்முதல் செய்ய 20 விழுக்காடு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும். இதற்காக, ஆண்டுதோறும் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், "நூற்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கு 6 சதவிகிதம் வட்டி மானியத் திட்டம் விரிவுபடுத்தப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.2.2026) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 1,238.19 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9,696 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து –

பிப்.12 - அன்று தமிழ்நாடு முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெறுகிறது!

சென்னை, பிப்.8 -

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், பிப்ரவரி 12 - வியாழக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து - மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ்நாட்டின் அனைத்து மாநகரங்களில் தலா ஒரு இடத்திலும் மற்றும் கழக ஒன்றியம், நகரம், பேரூர் அளவிலும் **12.02.2026 - வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி** சார்பில் **"மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"** நடைபெறும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள் வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்பு திட்ட நிதி ரூ.3,112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும் வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை வளர்ச்சித் திட்டமும் இல்லை என ஒன்றிய அரசு கைவிரித்த போதும் அவர்களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அடிமை அ.தி.மு.க.

நிதி மறுப்பு ஒருபுறம் என்றால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சட்டத்தை திரும்பப்பெறவோ, அதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவோ செய்யாமல் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதோடு அமெரிக்காவின் விவசாயம் சார்ந்த பொருட்களை இங்கே இறக்குமதி செய்து விற்க ஒப்புக்கொண்டு நமது விவசாயிகளின் வாழ்வையே கேள்விக்குறியாக்கி உள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என கிராமப்புற மக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதல் நடத்தி உள்ளது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு உறுதுணையாக இருந்து துரோகம் செய்து வருகிறது அ.தி.மு.க.

நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், புது புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத் தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இழைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க.வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் டெல்லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அ.தி.மு.க.வைக் கண்டித்தும் **மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் அனைத்து மாநகரங்களிலும் தலா ஒரு இடத்திலும் மற்ற இடங்களில் கழக நகர, ஒன்றிய, பேரூர் அளவிலும் கண்டன ஆர்ப்பாட்டம்** நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து மாவட்டச் செயலாளர்கள் – நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ் நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில்

பிப்.17 - அன்று இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல்!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, பிப். 8 -

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டம் பிப். 17 - அன்று கூடுகிறது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் 2026 - 2027-ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தாக்கல் செய்கிறார் என்று சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் 2026-2027-ஆம் ஆண்டிற்கான இடைக் கால நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தாக்கல் செய்வது குறித்து, நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய சபாநாயகர் அப்பாவு, தமிழ்நாடு அரசின் சட்டமன்ற கூட்டத்தொடர் வரும் 17ம் தேதி தொடங்க உள்ளதாக தெரிவித்தார்.

அன்றைய தினமே, 2026 - 2027-ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்ய உள்ளதாகவும் கூறினார்.

பிப்ரவரி 20-ஆம் தேதி முன்பணமானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படும் என்று கூறிய சபாநாயகர் அப்பாவு,

அலுவல் ஆய்வுக்குழு கூடி, பேரவையை எத்தனை நாட்கள் நடத்தப்படும் என்று விவாதித்து அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

கேள்விக் கணைகளுக்கு அஞ்சும் மோடி!